பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

13-08-2025 WEDNESDAY 7.15 PM

<u>வணக்கம் ஆகாஷவாணி - செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா – சிங்கப்பூர் இடையோன நீடித்த ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

- நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஸ்வரன் கூறியுள்ளார்.

- சுதந்திரப் போராட்ட வீராங்கனை லோக் மாதா அஹில்யா பாய் நினைவு தினத்தை ஒட்டி, தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

- சுதந்திர தினத்தை ஒட்டி, நாட்டின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Shanker Heisnam – Ajay Malik* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<

இந்தியா – சிங்கப்பூர் இடையோன நீடித்த ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே, அமைச்சர்கள் நிலையிலான மூன்றாவது சுற்று வட்டமேஜை கூட்டம், புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

இதில், மத்திய அமைச்சர்கள் திரு. ஜெய்சங்கர், திருமதி. நிர்மலா சீதாராமன், திரு. அஷ்வினை வைஷ்ணவ், திரு. பியூஷ் கோயல் மற்றும், சிங்கப்பூர் அரசின் சார்பில் அந்நாட்டு துணைப் பிரதமர் திரு. *Gan Kim Yong*, வெளியுறவு அமைச்சர் திருமதி. *Josephine Teo* ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து, மத்திய அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தக் கூட்டத்தின்போது, இந்தியா

சிங்கப்பூர் இடையேயான கலந்துரையாடல் ஆக்கபூர்வமாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இருநாட்டு அரசுகள் மற்றும் தொழில்துறையினர் இடையேயான ஒத்துழைப்பை அடுத்தகட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டதாகவும் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்த கூட்டம் தொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியா – சிங்கப்பூர் இடையே டிஜிட்ல்மயமாக்கல், திறன் மேம்பாடு, சுகாதார சேவை மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஸ்வரன் கூறியுள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பல்வேறு பிரச்சினைகள் காரணமாக, கடந்த ஆண்டு நாட்டின் நுகர்வு விகிதம் குறைந்ததை அடுத்து, மத்திய பட்ஜெட்டில் நடுத்தர வகுப்பினருக்கு வரிச்சலுகைகள் அறிவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியை ஊக்குவிப்பததற்காக ரிசர்வ் வங்கியும் வட்டி குறைப்பு செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு காரணமாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் ஏற்படும் தாக்கம் குறித்து தற்போதைய நிலையில் மதிப்பிட முடியாது என்றும் திரு. அனந்த நாகேஸ்வரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<

சுதந்திரப் போராட்ட வீராங்கனை லோக் மாதா தேவி அஹில்யா பாய் ஹோல்கரின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பொதுசேவைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்தவர் லோக் மாதா அஹில்யா பாய் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

காசி விஸ்வநாதன் கோவில், சோம்நாத் மகாதேவ் ஆலயம் உள்ளிட்ட பல்வேறு கோவில்களை புனரமைத்த அவர், இந்திய கலாச்சாரத்தின் தொன்மையை உலகிற்கு எடுத்துரைத்தவர் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வீரத்தின் அடையாளமாக திகழ்ந்த அஹில்யா பாய், சுதந்திரப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டியவர் என்று கூறியுள்ளார்.

>>>>>><<<<<

சுதந்திர தினத்தை ஒட்டி, நாட்டின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லியில், செங்கோட்டை, நாடாளுமன்ற வளாகம், விமான நிலையம், இந்தியா கேட் உள்ளிட்ட பகுதிகளில் பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருப்பதுடன், ட்ரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு கஷ்மீரின் ஸ்ரீநகர் உள்ளிட்ட இடங்களிலும். பாகிஸ்தானை ஒட்டிய எல்லைப் பகுதியிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் திருச்சி விமான நிலையத்தில் ஐந்தடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதேபோன்று, தென்காசி மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையங்களில், ரயில்வே பாதுகாப்பு படையினர் மற்றும் மாநில காவல்துறையினரின் தீவிர சோதனைக்குப் பிறகே பயணிகள் அனுமதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் – செந்தில் 37 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இம்மாதம் 31ஆம் தேதி அகில இந்திய வானொலியில் மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை இம்மாதம் 29-ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நமோ செயலி அல்லது mygov இணையதளம் வாயிலாகவும். 1 8 0 0 – 1 1 – 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமாகவும் தங்களது கருத்துக்களை பதிவு செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

ராஜஸ்தான் மாநிலம், Dausa மாவட்டத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த 11 பேரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக கூறியுள்ளார்.

மேலும், உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும். காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் வழங்கப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

இளையோருக்கான தலைமைப் பண்பு மேம்பாடு, திறன் உருவாக்கம் மற்றும் அறிவாற்றல் பகிர்வு தொடர்பாக, மத்திய இளைஞர் நலத்துறைக்கு உட்பட்ட மை பாரத் அமைப்பு, குஜராத்தை

சேர்ந்த SOUL அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், நாடுமுழுவதும் 18 முதல் 29 வயது வரையிலான ஒரு லட்சம் பேரை இளம் தலைவர்களாக உருவாக்குவதற்கான பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

குறிப்பாக, பழங்குடியினர், பெண்கள் மற்றும் சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு டிஜிட்டல் எழுத்தறிவு, சமூக தொழில் முனைவோர் உள்ளிட்ட பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி, தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள், தொழல் முனைவோராக உருவெடுத்து வருகின்றனர்.

இந்தப் பயிற்சி தங்களது வாழ்வாதாரத்திற்கு பேருதவியாக அமைந்துள்ளது என்று பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பயனாளி 25 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

கொலை வழக்கு ஒன்றில் மல்யுத்த வீரர் சுஷில்குமாருக்கு வழங்கப்பட்ட ஜாமீனை, உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

ஒலிம்பிக் பதக்கம் வென்றவரான சுஷில்குமார், ஹரியானா மாநிலம், ரோத்தக்-கைச் சேர்ந்த தேசிய இளையோர் மல்யுத்த சாம்பியனான சாகர் தங்கரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, கடந்த 2021ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் தில்லி உயர்நீதிமன்றம் கடந்த மார்ச் மாதம், சுஷில்குமாருக்கு ஜாமீன் வழங்கியிருந்த நிலையில். இதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், அவரது ஜாமீனை ரத்து செய்ததுடன், ஒரு வாரத்திற்குள் சரணடையுமாறு உத்தரவிட்டுள்ளது.

>>>>>><<<<<

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shanker Heisnam – Ajay Malik இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-1 என்ற செட்கணக்கில் தென்னாப்பிரிக்காவின் Ruben – Ethan இணையை வென்றது.

>>>>>><<<<<<

*Saipan* சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Tanya Hemant* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நார்தன் மரியானாஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 4-15, 15-9, 15-7 என்ற செட்கணக்கில் ஜப்பானின் *Nodoka Sunakawa*-வை வென்றார்.

>>>>>><<<<<<

தாய்லாந்து சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Pranay Katta* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைஸி, இரண்டாம் இடத்தில் உள்ளார்.

ஆறாவது சுற்று முடிவில் அவர் 3 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றுள்ளார்.

>>>>>END<<<<<